මගේ අංකය
எமது இல
My No.
VV/4/2,4,7,8,11,12,13

ඔබේ අංකය
Your No.
உமது இல

දුරකථනය
தொலைபேசி
Telephone
011-2853615
011-2853777
011-2856201
011-2856202

ශ්‍රී ලංකා විවෘත විශ්වවිද්‍යාලය
இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்
THE OPEN UNIVERSITY OF SRI LANKA

තැපැල් පෙට්ටිය 21
නාවල
නුගේගොඩ

அஞ்சற் பெட்டி 21
நாவல
நுகேகொட

Post Office Box 21
Nawala
Nugegoda

மின்னஞ்சல்: convocation2022@ousl.lk

12 ஜுன் 2023
சங்கைக்குரிய ஐயா,
அன்புள்ள ஐயா/அம்மணி

**<u>பட்டமளிப்பு விழா – 2021(II)</u>**

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பொது பட்டமளிப்பு 2022 (II) கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH) **19 ஜுலை, 2023** அன்று நடைபெறும்.

எதிர்வரும் இப் பட்டமளிப்பில் பட்டப்பின் கற்கை டிப்ளோமா/ முதுமாணிப் பட்டம் வழங்கப்படுவதற்கு நீங்கள் தகுதி பெற்றுள்ளீர்கள் என்பதை உங்களுக்கு அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இதனுடன் இணைக்கப்பட்ட விண்ணப்ப படிவத்தினை பெற்றுக்கொள்ளவும். பட்டமளிப்பு கட்டணமான ரூபா. 6,500.00 செலுத்துமாறு நீங்கள் வேண்டப்படுகிறீர்கள். https://resignfo.ou.ac.lk/ எனும் இணையத்தளத்தில் கட்டணம் செலுத்துவதற்கான வவுச்சரினைப் பெற்றுக்கொள்ளலாம். முறையாகப் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்ப படிவத்தை, பணம் செலுத்திய உறுதிச் சீட்டுடன், உதவி பதிவாளர்/பரீட்சை பிரிவு, இலங்கை திறந்த பல்கலைக்கழகம், நாவல, நுகேகொடக்கு 25 ஜுன் 2023 அன்று பி.ப 4.00 மணிக்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு அல்லது நேரடியாக கையளிக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள். **25 ஜுன் 2023 <u>அன்று பி.ப. 4.00 மணிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் இப் பட்டமளிப்பிற்கு கருத்திலெடுக்கப்படமாட்டாது.</u>**

https://resignfo.ou.ac.lk/ எனும் இணையத்தளத்தில் காணப்படும் கட்டணம் செலுத்துவதற்கான வவுச்சர் அல்லது இலங்கை திறந்த பல்கலைக்கழக நிகழ்நிலை கட்டண நுழைவாயிலினைப் ( Payment Gateway) பயன்படுத்தி சகல கொடுப்பனவுகளும் காசாளர், இலங்கை திறந்த பல்கலைக்கழகம், நாவல, நுகேகொட இடம் செலுத்தப்படல் வேண்டும் அல்லது மக்கள் வங்கி, நுகேகொட கிளையின் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் "சேகரிப்பு கணக்கு இல. 0174 100151189657 இல் வரவிலிடப்படல் வேண்டும். பணம் செலுத்தும் உறுதிச் சீட்டின் பல்கலைக்கழகப் பிரதியை (இரண்டாவது பிரதி) அல்லது நிகழ்நிலைக் கட்டணத்திற்கான ஆதாரத்தினை விண்ணப்ப படிவத்துடன் இணைத்தல் வேண்டும்.

எதிர்பாராத சூழ்நிலை காரணமாக பட்டமளிப்பில் பங்குபற்ற உங்களால் இயலாதிருப்பினும், உரிய பட்டப்பின் கற்கை டிப்ளோமா/ முதுமாணிப்பட்டத்திற்கான விண்ணப் படிவத்தினை அனுப்பி வைக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள். **முழுமையாகப் பூரணப்படுத்தப்பட்ட பட்டதாரி விண்ணப்ப படிவத்துடன் ரூ.6,500.00 செலுத்தியதற்கான பற்றுச் சிட்டு மற்றும் கட்டணங்கள் ஏதேனும் நிலுவையிலிருந்தால் அவற்றினையும் செலுத்தி அதற்கான பற்றுச் சிட்டு ஆகியவற்றை இணைத்து 25 ஜுன் 2023 அன்று அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பிக்காதுவிடின், சான்றிதழ் வழங்கப்படாது என்பதனை கவனத்தில்கொள்ளவும்.** காசோலைகள், காசுக் கட்டளைகள் அல்லது தபால் கட்டளைகள் ஏற்கப்படமாட்டாது.

நிகழ்வு விபரங்களை உள்ளடக்கிய கடிதம் உரிய காலப்பகுதியினுள் அனுப்பி வைக்கப்படும்.

உதவி பதிவாளர்/பரீட்சைகள்

பதிவாளருக்காக

---

**பட்டதாரி விண்ணப்ப படிவத்தினை பூரணப்படுத்துவதற்கான நிபந்தனைகள் ( பட்டதாரி விண்ணப்ப படிவம் ஆங்கில மொழியில் தரப்பட்டுள்ளது.)**